அதைப் பற்றிய விவாதம் எதுவும் இந்த அவையில் நடைபெறாது. விதிகளுக்கிணங்க, மன்ற முதல்வர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் ஒப்புதலுடன் ஒத்தி வைப்புத் தீர்மானத்தையொட்டிய இந்த நடைமுறை (Procedure) செயலாக்கப்படும் என்று மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு நான் அறிவித்துக் கொள்கிறேன்.

2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

(அ) வருஷநாடு மலைப்பிரதேசத்தில் விவசாயிகள் வெளியேற்றப்படுதல்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. ஆ. கு. சுப்பையா அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதனுடைய வாசகத்தை நான் அப்படியே படிக்க வேண்டுமென்று இப்போது நடைமுறை தீர்மானிக்கப் பட்டிருக்கிறது.

"மதுரை மாவட்டத்தில் வருஷநாடு மலைப் பிரதேசத்தில் 14 கிராமங்களில் போலீசாரும், வன இலாகா அதிகாரிகளும் பலவந்தமாக விவசாயிகளைக் கிராமங்களை விட்டு வெளியேற்றுகின்றனர். சொந்த உழைப்பின் மூலம் பண்படுத்தி, நிலத்தைச் சாகுபடிக்குக் கொண்டுவந்து பல ஆண்டுகாலமாக விவசாயம் செய்து வருகின்றனர். ஆயிரக்கணக்கான குடும்பங்கள் அழிந்துவிடும் அபாயம் ஏற்பட்டுள்ளதால் அரசினர் தலையிட்டு உடனே வெளியேற்றுகின்ற நடவடிக்கைகளைத் தடை செய்யவேண்டும்" என்று கோரி தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். இதைப் பற்றிய என்னுடைய தீர்ப்பு—

இது அரசினரின் சாதாரண நிர்வாகத்திற்கு உட்பட்டது. ஆகவே, விதிகளின்படி இதற்கு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வர முடியாது. மேலும், இதைப்பற்றி உறுப்பினர் அவர்கள் விவாதிக்க வாய்ப்பு இருக்கிறது. கவர்னர் உரையின்மீது பேசும்போது இதைப் பற்றிக் குறிப்பிடலாம். ஆகவே, பேரவைத் தலைவருடைய அனுமதி இந்தத் தீர்மானத்திற்குக் கொடுக்கப்படவில்லை என்று அறிவிக்கிறேன்.

(இ) இந்தி எதிர்ப்புப் போராட்டம் பற்றிய கோப்புகள் திடீரென்று மறைதல்.

Mr. Speaker : Now, let us take up the notice of Adjournment Motion given by hon. Member Dr. H. V. Hande. The notice reads as follows :—

"I wish to adjourn the business of this House to discuss a matter of urgent public importance, namely, the sudden missing of a few files immediately after the announcement of the election results and before the present Ministry assumed office. The files are mostly connected with the anti-Hindi agitation that took place in 1965."

On this my ruling is as follows :

Although I admit that the matter raised in the notice does not relate to the day-to-day administration of the Government, it is in the nature of eliciting information. The hon. Member will have an opportunity to refer to this matter in the course of the discussion on the Interim Budget, or he may even call the attention of the Honourable Minister concerned under rule 41 of the Assembly Rules, or he may give a short notice question and get the answers. Therefore, it is not necessary to adjourn the business of the House to discuss this particular matter. The Honourable Member will certainly have an opportunity to discuss this matter in the course of the discussion on the Interim Budget. So, I withhold my consent to the Hon. Member to move the Adjournment Motion.

1. அடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1966-67-ம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை (Final Supplementary Estimates) அவை முன் வைத்து உரையாற்றுவார்கள்.

3. ஒழுங்குப் பிரச்சினைகள்.

(அ) பத்திரிகையிலிருந்து குறிப்புகள் படித்தல்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். ஒரு ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப விரும்புகிறேன். நேற்று ஒரு கனம் அங்கத்தினர் அவர்கள் பேசும்படியான சந்தர்ப்பத்தில் பத்திரிகையில் இருந்து சில குறிப்புகளை வாசித்தார்கள். எனக்குத் தெரிந்தவரை அதைப் பொருத்து சட்ட விதிமுறைகள் எப்படி இருக்கின்றன என்றால் எந்த அங்கத்தினரும் சட்டசபையில், பத்திரிகைகளிலிருந்து எடுத்து படிப்பதற்கு விதிகள் இருக்கின்றன என்பதுதான். பத்திரிகைகளிலிருந்து குறிப்புகளை எடுத்துச் சொல்வதற்கு உரிமை இருக்கிறது. நேற்று எங்கள் கட்சி அங்கத்தினர் அவர்கள் பத்திரிகையிலிருந்து எடுத்துச் சொன்னது சட்ட வரம்புக்கு உட்பட்டது, சட்ட நியாயந்தான் என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருவதோடு, பத்திரிகைக் குறிப்புகளை வாசிப்பதற்கு எல்லா அங்கத்தினர்களுக்கும் உரிமையுண்டு; அதிலே எந்த விதமான ஒழுங்குப் பிரச்சினையும் எழுப்ப அவசியம் இல்லை என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன்.

THIRU R. PONNAPPA NADAR : Mr. Speaker, Sir, I may be permitted to say a few words regarding this matter. The relevant rule is rule 63 of the Assembly Rules and it runs thus :

A member present at a sitting of the House, and not speaking, shall not read any newspaper except in connection with the business of the House.